**தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் - 2010**

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர தேசிய விளையாட்டுக்கள் நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 41,214 தொகையான முதலீட்டு வருமானம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் சார்பில் பிலியந்தலவில் ஓர் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 6,500,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. இத் தொகை திணைக்களத்தில் இருந்து மீளளிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறெனினும், பெறவேண்டியதாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) தாஜ் தொலைக்காட்சியில் இருந்து கடந்த ஆண்டின் போது நிதியத்தின் சார்பில் விளையாட்டுக்கள் அமைச்சினால் ரூபா 1,268,290 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் அமைச்சினால் இது நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

**1.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ஒவ்வொரு விடயங்களுக்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றாதாரங்கள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்று |
|---|---|---|---|
| (அ) | செலவினம் | | |
| (i) | மலேசியாவில் நடைபெற்ற விசேட பயிற்சிப் பாடநெறிகளுக்கான இலங்கை பட்மிடன் சங்கச் செலவினம் | 406,000 | உறுதிப்படுத்தல்கள் |
| (ii) | பிரதேச செயலகம் ஹதரெலியத்த – வருடாந்த மரதன் ஓட்டப்பந்தயம் | 50,000 | மேற்படி |
| (iii) | தெஹிவளை திருக்கன்னியர் மட பாடசாலையின் கூடைப்பந்தாட்ட விளையாட்டரங்கை புதுப்பித்தல் | 175,000 | மேற்படி |
| (iv) | சர்வதேச வழிகாட்டுனருக்காக இலங்கை டெனிஸ் சங்கம் | 1,000,000 | உடன்படிக்கை |

| | | | |
|---|---|---|---|
| (v) | “தாருண்யட்ட ஹெட்ட” – ரீஎம் ரீவீ அலைவரிசையூடாக நடாத்தப்பட்ட ஒளிபரப்பு நிகழ்ச்சி | 500,000 | உறுதிப்படுத்தல்கள் |
| (ஆ) | விமானக்கட்டணங்கள் | 1,299,260 | உரிய நாட்டில் இருந்தான அழைப்பு |

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

---

1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் அதிகாரச் சட்டத்தின் 25(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் முடிவடைந்த பின்னர் இயலுமான அளவு விரைவாக நிதியத்தின் நிருவாகம் தொடர்பான அறிக்கை ஒன்று அமைச்சின் செயலாளரினால் தயாரிக்கபடவேண்டிய போதிலும் அவ்வாறான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட சுப்பிரி வாசனா லொத்தர்களில் இருந்து பெறவேண்டிய வருமானத் தொகை ரூபா 51,065,440 ஆகக் காணப்பட்டது. ரூபா 4,541,350 தொகைக்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. லொத்தர் சபையில் இருந்து பெறவேண்டிய தொகை திறைசேரிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், இப் பணம் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டுப் பயணத்திற்காக விளையாட்டு அமைச்சின் சார்பில் ரூபா 1,300,000 கிரயமான இரு விமானச் சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விளையாட்டு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக இப் பயணம் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக நியாயப்படுத்துவதற்கு போதிய விளக்கங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) பாதீட்டு ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்டிராத பொதுநலவாய விளையாட்டு ஊக்குவிப்பிற்கான தேசிய ஒலிம்பிக் குழுவிற்கும் தியகமவில் உள்ள விளையாட்டு கட்டிடத்தின் நிர்மாணிப்பிற்கான முறையே ரூபா 10 மில்லியன் தொகையும் ரூபா 35 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. இக் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் எய்தப்பட்டவற்றின் நடைமுறை கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 27,045,187 மிகையினை விளைவித்திருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 68,113,817 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 41,068,630 ஆல் குறைவைச் சுட்டிக்காட்டியிருந்தன. அக் குறைவிற்கு ரூபா 26 மில்லியன் தொகையாலான வருமான அதிகரிப்பும் ரூபா 67 மில்லியன் தொகையான செலவின அதிகரிப்பும் முக்கிய காரணமாகக் காணப்பட்டன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

இலங்கையில் விளையாட்டுக்களுக்கு ஊக்கமளித்தல், அவற்றினை மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் என்பன நிதியத்தினை தோற்றுவிப்பதற்கான அடிப்படை நோக்கமாக இருந்த போதிலும் அதற்காக முறைப்படியான கூட்டுத்திட்டம் ஒன்றோ அல்லது வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்றோ தயாரித்து அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சில விளையாட்டுச் சங்கங்கள் அல்லது தனிப்பட்டவர்களுக்கு வேண்டுகின்ற ஏதும் நிதியை வழங்குவதனை மாத்திரமே தற்பொழுது மேற்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையே பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. எனவே பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிராமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் காலத்திற்கு காலம் அமைச்சு செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பெற வேண்டிய கணக்குகள்

(ஆ) பாதீடு

(இ) நிதிகளின் பயன்பாடு